உங்களுடைய உடம்பிலே இல்லாமல் போய்விடும். ஆகவே, நீங்கள் ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பன்னீர்செல்வம் அவர்கள், அவர்களை அழைத்துப் பேசுவார். பேசுவதற்கு அவர்கள் வருவார்களேயானால், பேசுவார். பேசுவதற்கு நீங்கள் அனுப்பி வைப்பீர்களேயானால், பேசுவார். சில பேர் இந்தப் போராட்டம் நீடிக்கவேண்டும் என்று கருதுகின்றவர்கள் உங்களிடையே யாராவது இருந்தால், தயவுசெய்து அந்த எண்ணத்தைக் கைவிட்டுவிடுங்கள். அரசும், இந்த மருத்துவர்களும் ஒன்றாகச் செயல்பட, மக்களுக்குப் பயன்பட உதவுங்கள் என்று கேட்டுக்கொண்டு, இந்த அளவில் இந்தத் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்தைச் சொல்லி முடிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–35

3. கவன ஈர்ப்பு

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி, தக்கலை–மேக்கோடு–குலசேகரம் சாலை, வடிகால் வசதி செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திருமதி ரா. லீமா றோஸ் அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திருமதி ரா. லீமா றோஸ் அவர்கள்.

***திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி, தக்கலை–மேக்கோடு–குலசேகரம் சாலை வடிகால் இல்லாமையால், போக்குவரத்துக்குப் பயனற்ற முறையில் பழுதடைந்துள்ளது” குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2009 ஜூலை 8]

***மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

விவர அறிக்கை

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதிக்குட்பட்ட தக்கலை–மேக்கோடு–குலசேகரம் சாலையானது, நாகர்கோவில் (நெ.) கோட்டப் பராமரிப்பில் உள்ள கீழ்க்கண்ட 2 சாலைகளை உள்ளடக்கியதாகும்.

1. தக்கலை–தடிக்காரன்கோணம் சாலை கி.மீ. 0.0–8.6

2. மேக்கோடு–குலசேகரம் சாலை கி.மீ. 0.0–7/2

தக்கலை–தடிக்காரன்கோணம் சாலையானது, கி.மீ. 0/0–8.6 வரையுள்ள பகுதிகளைக் கொண்ட ஒரு மாவட்ட முக்கிய சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 1/165–3/0 வரையுள்ள ஒருவழித் தட சாலையைப் "ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2005–2006"–ன்கீழ், ரூ.63.50 இலட்சம் மதிப்பீட்டில் இருவழித் தடமாக அகலப்படுத்தும் பணியானது, 13–9–2008 அன்று முடிவடைந்துள்ளது. இச்சாலை, தற்போது நல்ல நிலையில் உள்ளது. மேலும், கி.மீ. 3/0–5/6 வரையுள்ள ஒருவழித் தடச் சாலையை, இருவழித் தடச் சாலையாக அகலப்படுத்த "ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2005–2006"–ன்கீழ், ரூ.99 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இச்சாலையின் இடது பக்கம், தடுப்புச் சுவர் கட்டப்பட்டு, சாலை அகலப்படுத்தப்பட்டு, வேலை முடிக்கப்பட்டு, நல்ல நிலையில் உள்ளது.

மேலும், இச்சாலையில் கி.மீ. 2/8–8/6 முடியவுள்ள பகுதியின் இடதுபுறம் ஆழமான விளை நிலமும், வலது புறம் பொதுப் பணித் துறைக் கால்வாயும் உள்ளது. இந்தக் கால்வாயிலிருந்து நீர் வடிந்து சாலை முழுவதும் குண்டும் குழியுமாகப் பழுதடைந்துள்ளதால், இச்சாலையின் கி.மீ. 3/0–5/2 முடியவுள்ள பகுதியில், "V" வடிவ வடிகால் சானல், கரையோரம் அமைத்து, சாலையில் வரும் தண்ணீரை இரண்டு கிலோ மீட்டருக்கு அப்பால், ஓடையில் சேரும்படி ரூ.67 இலட்சம் மதிப்பீட்டில், "ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2008–2009"–ன்கீழ் எடுக்கப்பட்டு, வேலை முடிவடைந்துள்ளது. தற்பொழுது பொதுப் பணித் துறை சானலிலிருந்து, சாலையில் நீர்க்கசிவு ஏற்படுவது தடுக்கப்பட்டுள்ளது.

[திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்] [2009 ஜூலை 8

மேலும், கி.மீ. 0/0–8/6 முடியவுள்ள இச்சாலையின் மத்தியப் பகுதியை மேம்பாடு செய்தல், மற்றும் முட்டைக்காடு, சித்திரங்கோடு சந்திப்புகளில் வடிகால் கட்டுதல் உட்பட்ட பணிகளுக்கு "ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2008–2009 கட்டம் II"–ன்கீழ், ரூ.175 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கப்பட்டு, மதிப்பீடு தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. விரைவில் ஒப்பந்தம் கோரி, நடப்பாண்டில் பணி முடிக்கப்படும்.

மேக்கோடு–குலசேகரம் சாலையானது, கி.மீ. 0/0–7/2 வரையுள்ள பகுதிகளைக் கொண்ட ஒரு மாவட்ட முக்கிய சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 0/0–3/6 வரையிலான ஒருவழிச் சாலையை, மத்திய சாலை நிதி (CRF) 2006–2007 திட்டத்தின்கீழ், இருவழித் தடமாக அகலப்படுத்தும் பணி, தேசிய நெடுஞ்சாலைத் துறையின்மூலம் ரூ.94 இலட்சத்தில் செயல்படுத்தப்பட்டு, 04/2008 அன்று முடிக்கப்பட்டது. மேலும், இச்சாலையில் கி.மீ. 0/0–3/6 வரையுள்ள பகுதியின் இடதுபுறம் மலையடிவாரமாகவும், வலதுபுறம் தனியார் இரப்பர் தோட்டமாகவும் உள்ளது. மழை நேரங்களில் மலையிலிருந்தும், கல் குவாரியிலிருந்தும் வரும் தண்ணீர் செல்ல வழியில்லாமல், சாலையில்தான் வடிகிறது. மறுபக்கம் தனியார் இடமானதால், நேரடியாக மழை நீரினைத் திருப்ப இயலாது. மழை நீரினை சுமார் 1.50 கி.மீ. தூரத்தில் உள்ள வலியாற்றுமுகம் ஆற்றில்தான் சேர்க்கப்படவேண்டும். தற்சமயம் மண் வடிகால் (Earthern Drain) வெட்டப்பட்டுள்ளது. ஆனாலும், கல் குவாரி நுழைவாயிலில் தனியார் மண் வடிகாலினை அவ்வப்போது அடைத்துவிடுவதாலும், தண்ணீர்ப் போக்கினைத் தடுப்பதாலும், சாலை சேதமடைந்தது. மேற்படி சாலையில், கி.மீ. 0/2, 0/4, 0/6, 1/2 மற்றும் 1/8 ஆகிய இடங்களில் மழையினாலும், இடதுபுறம் உள்ள பாறைகளிலிருந்து வரும் மழை நீர் மற்றும் ஊற்று நீராலும், சாலை மிகவும் பழுதுபட்டுள்ளது. மேற்படி சாலையில் எந்த வடிகால் வசதியும் இல்லை. மேலும், சாலையின் வலதுபுறம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் வேர்க்கிளம்பி கூட்டுக் குடிநீர்க் கசிவாலும், மண் இறுகாமல் இருந்ததாலும், சாலை மிகவும் சேதமடைந்துள்ளது. மேற்படி சாலையில், கி.மீ. 0/4–ல், இடதுபுறம் வடிகால், தடுப்புச் சுவர் மற்றும் கடின தளம் அமைக்க, 2008–2009–ன் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.30 இலட்சம் அங்கீகரிக்கப்பட்டு, மேற்படி வேலைகள் ஜூலை 2009–க்குள் முடிவடையும். மேலும், நடப்பாண்டில் இச்சாலையில் கி.மீ. 1/0–3/4 வரையுள்ள பகுதிகளில் வடிகால் அமைத்தல் மற்றும் 0/6–ல் தடுப்புச் சுவர் கட்டுதல் ஆகிய பணிகளை, நிதி நிலைக்குட்பட்டு மேற்கொள்ள

2009 ஜூலை 8] [திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்]

பரிசீலிக்கப்படும். மேற்படி வேலைகள் முடிவடையும்பட்சத்தில், சாலை நல்ல நிலையில் அமையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையினைப் படித்துப் பார்த்தேன். சித்தரங்கோடு–மேக்கோடு–குலசேகரம் சாலையென்பது, முக்கிய சாலையான தக்கலை–தடிக்காரன்கோணம் சாலையின் ஒரு பகுதியாகும். சுமார் 7 கிலோ மீட்டர் தூரமுள்ளது. ஏற்கெனவே 3½ கிலோ மீட்டர் சாலையை Central Road Fund மூலம் இரண்டு வருடத்திற்குமுன் விரிவாக்கம் செய்து ஒரே மாதத்தில் மழையாலும், குடிநீர் வடிகால் வாரியம்மூலம் குழாய் பதித்ததாலும், முக்கியமாக கல் குவாரி மலையடிவாரத் தண்ணீர் பாய்ச்சலாலும், தரமற்ற வேலையாலும் அடித்துச் செல்லப்பட்டது. பொதுமக்கள் பல்வேறு போராட்டங்களைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர். அந்தப் பகுதியில் விபத்து நடைபெற்றுள்ளது. ஆகவே, முழுமையாக கான்கிரீட் வடிகால் அமைத்தால்தான் சாலையைப் பாதுகாக்க முடியும். இந்த ஆண்டில் நிதியொதுக்கீடு செய்து, அந்த வேலை எடுத்துச் செய்யப்படுமா? மேலும் இதே சாலையில் தொடர்ந்து 3½ கிலோ மீட்டர் தூரம் அகலப்படுத்தவும், தக்கலை–தடிக்காரன்கோணம் சாலையின் மையப் பகுதி குண்டும் குழியுமாக இருப்பதை மாற்றிச் செப்பனிடவும் இந்த ஆண்டில் ஆவன செய்யப்படுமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதியிலுள்ள மேக்கோடு–குலசேகரம் சாலை ஒரு மாவட்ட இதர சாலை. அந்தச் சாலை சுமார் 7½ கிலோ மீட்டர் நீளம் கொண்ட சாலை. இந்தச் சாலையில் ஏறத்தாழ 3½ கிலோ மீட்டர் சாலை, இரண்டு வழிச் சாலையாக அகலப்படுத்தப்பட்டும், அதேபோல ஏற்கெனவே இருக்கிற சாலையும் நல்ல முறையிலே இருக்கிற காரணத்தால் போக்குவரத்து நல்ல முறையிலே செயல்பட்டு வருகிறது.

[திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்][2009 ஜூலை 8

ஆனால் அடிக்கடி கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்யக்கூடிய மழையின் காரணமாக, அதிலும் குறிப்பாக இந்தச் சாலையின் ஒருபுறம் தனியார் இரப்பர் தோட்டமும், இன்னொருபுறம் மலைப்பாங்கான பகுதியாகவும் அமைந்திருப்பதாலும், குறைவான மழை பெய்தால்கூட அந்த மலைக் குன்றுகளிலிருந்து வரக்கூடிய மழை நீர், இந்தச் சாலையைப் பழுது செய்துவிடுகிறது. அதேநேரத்தில் அந்தச் சாலையில் பழுது எற்படாமல், தண்ணீர் தேங்காமல் இருப்பதற்காக, ஏறத்தாழ 1½ கிலோ மீட்டர் நீளத்திற்கு 1.0 மீட்டர் அகலம் கொண்ட மண் வடிகால் வெட்டப்பட்டு, அங்கு அந்தப் பகுதியிலிருக்கக்கூடிய வழியாட்டுமுகாம் ஆற்றில் சேர்ப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் பழுது ஏற்படுகின்ற நேரத்திலெல்லாம் அந்தச் சாலை உடனடியாகப் பழுதுபார்க்கப்பட்டு, போக்குவரத்துக்கு உகந்ததாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற மீதமுள்ள பகுதியை அகலப்படுத்துவதும்—அதேநேரத்திலே கான்கிரீட் வடிகால் அமைத்தால்தான் நிரந்தரத் தீர்வு என்று சொல்லியிருக்கிறார். அவ்வாறு அமைப்பதற்கு ஏறத்தாழ 1½ கோடி ரூபாய் தேவைப்படுகிறது. நிதிநிலைமைக்கேற்ப வருகிற காலத்தில் அதுபற்றி அரசு பரிசீலிக்கும். பாக்கியுள்ள சாலைகளைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார். அந்தச் சாலைகள் எல்லாம் இந்த நிதியாண்டிலே எடுத்து நல்ல முறையிலே பராமரிக்கப்படும்.

4. அறிக்கைகள் அளித்தல்

மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுவின் அறிக்கை அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு திரு. மு. அப்பாவு, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008–2009 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் இருபத்து மூன்றாவது மற்றும் இருபத்து நான்காவது அறிக்கையினைக் குழுவின் சார்பாகப் பேரவைக்குச் சமர்ப்பிக்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS